# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

## MCOP. 297/2020

Deposition of witness for the Respondent/RW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 28-06-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Kaveri | Village | : |
| Father's Name | : Chinnaiyan | Taluk | : |
| Age | : 55 | Calling | : |

முதல் விசாரணை

நான் தற்போது பூந்தமல்லி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் அலுவலக ஆய்வாளர் நிலை–1 ஆக பணியாற்றி வருகிறேன். எனது அலுவலகத்தில் 11.12.2020 அன்று வெள்ளவேடு காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுதலின் பேரில் குற்ற எண்.2656/2020 வழக்கில் சம்மந்தப்பட்ட பதிவு எண். டிஎன் 20 டி எ 2407 கொண்ட மகேந்திரா டிராக்டர் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது முன்பக்க வலது சக்கரம் பஞ்சராகி இருந்தது. இது சம்மந்தமாக வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது எ.ம.த,.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேலும் அந்த வாகனத்திற்கு பதிவு செய்யப்படாத வாட்டர் டேங்கரை இணைத்து இயக்கப்பட்டுள்ளதால் சோதனை அறிக்கை வழங்கப்பட்டது. அதன் பேரில் அந்த வாகன உரிமையாளர் ரூ.22,000/– அபராதமாக எனது அலுவலகத்தில் செலுத்தியுள்ளார். அவ்வாறு செலுத்தப்பட்டதற்கான ரசீதின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது எ.ம.த,.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த வாகனத்தில் ஒரு இருக்கைக்கு தான் அனுமதி உள்ளது.

மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

அந்த வாகனத்திற்கு விபத்து காலத்திற்கு காப்பீடு, பதிவு சான்று ஆகியவை நிகழ்வில் இருந்தது. அந்த வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் நடப்பில் இருந்தது. பொதுவாக முதல் தகவல் அறிக்கை மற்றும் கோருதல் விண்ணப்பம் ஆகியவற்றை வைத்து தான் வாகனம் ஆய்வு செய்யப்படும் என்றால் சரிதான்.